# தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச்சங்கத் திங்கள் வெளியீடு.

துணர் ௨௰ } தாரண—மார்கழி 1944—டிசம்பர் { மலர் ௯

## தஞ்சைமா நாட்டில் தமிழிசை முழக்கம்

**த**ஞ்சை மாவட்டத் தமிழிசைச் சங்கம் 29—11—'44-ம் நாள் மாலை 6 மணிக்கு நம் சங்கப் பெருமன்றத்தில் பெருந்திருவாளர் வீரத் திரு. R. K. சண்முகஞ்செட்டியார் K. C. I. E. அவர்கள் தலைமையில் தொடங்கப்பெற்றது. நம் சங்கத் தலைவர் இராவுபகதூர் A. Y. அருளாநந்தசாமி நாடார் அவர்கள் திறப்பு விழாவின் முன்னுரையாக விழாத்தலைவரை வரவேற்கும் முறையிற் கூறிய நல்லுரைகளைப் பிறிதொரு பக்கத்தில் வெளியிட்டுள்ளோம். அன்பர்கள் ஆய்ந்துணர்ந்து அகமகிழ்வார்களாக!

தமிழ் நூல்களுட் சிறந்த முத்தமிழ்க் காப்பியமாகிய சிலப்பதிகாரத்திற்கு உரைவகுத்த அடியார்க்கு நல்லாரும் அரும்பத உரையாசிரியரும் இசைமரபுகளையும் இசைக்குறியீடுகளையும் யாழ் முதலிய கருவிகளின் இயல்புகளையும் அறிந்தவாற்றாற் சுட்டிக்கூறிப் போயினர். உரையாசிரியராகிய அடியார்க்கு நல்லார் "இசைத்தமிழ் நூலாகிய பெருநாரை பெருங்குருகும் பிறவும் தேவவிருடி நாரதன் செய்த பஞ்ச பாரதீயம் முதலாவுள்ள தொன்னூல்கள் இறந்தன. நாடகத் தமிழ்நூலாகிய பரதம் அகத்தியம் முதலாவுள்ள தொன்னூல்களும் இறந்தன. பின்னும் முறுவல் சயந்தம் குணநூல் செயிற்றியமென்பனவற்றுள்ளும் ஒருசார் சூத்திரங்கள் நடக்கின்ற அத்துணையல்லது முதல் நடுவிறுதி காணாமையின் அவையும் இறந்தனபோலும்." என எழுதியுள்ளாராதலின் அவராற் சுட்டப்பெறும் நூல்கள் பிற தமிழ்ப் பனுவல்களாய் இயற்றமிழ் வளன் சிறக்க இந்நாட்டில் ஒரு காலத்தில் நிலவியன என்றே யாங்கொள்ளல் வேண்டும். இதனாலன்றோ 'சங்கத்தமிழ் மூன்றுந்தா' எனவும் 'முத்து முத்தமிழ்' எனவும் ஆன்றோர்கள் இயலிசை நாடகமாகிய முத்தமிழையுங் குறித்துப் பேசிச் சென்றனர். சங்கநூலாகிய 'பதிற்றுப் பத்து' தூக்கும் வண்ணமும் துறையுங் கொண்டியங்கலானும், பரிபாடற்கு இசை வகுத்தார்

இவரிவரெனச் சுட்டப் பெறுதலானும், தொல்காப்பியர் ஒவ்வொரு நிலத்திற்குங் கருப்பொருள் வகையொடு சார்த்தி 'யாழ்' கூறுதலானும் 'தோழி தாயே பார்ப்பான் பாங்கன் பாணன் பாடினி இளைஞர் விருந்தினர் கூத்தர் விறலியர் அறிவர் கண்டோர் யாத்தகு சிறப்பின் வாயில்களென்ப' எனப் பாணரையும் பாடினியையும் கூத்தரையும் விறலியையும் அகப்பொருட் கிளவிக்குரியோராக்கி யுரைத்துள்ளமை யானும், இவர் யாவரும் இசையறி அறிஞர்களாதலானும் புறநானூற்றில் 'துடியன் பாணன் பறையன் கடம்பனென் றிந்நான் கல்லது குடியுமில்லை' என்று பழந்தமிழ்க் குடிவகைகளுள் பாணர்குடி சுட்டப் பெறுதலானும் தமிழகத்து இசையும் இசைமிழற்றுங் குடியும் இசையியற் கருவியும் எத்துணையோ ஆயிரம் ஆண்டுகட்கு முன் நிலை பெற்றிருந்தன எனக் கொள்ளற்கு ஏற்ற சான்றும்.

ஒப்பாரும் மிக்காரும் இல்லாத தலைமகன் ஒருவன் ஒரு சோலையுட் புக்குப் பாலதாணையின் சில செயல்களுக்கு உடன்பட்டு உளம் பறி கொடுத்து வாட்டத்துடன் மீட்டும் வந்தான். அவனது உயிர்த்தோழன் அவன், தளர்வினைக்கண்டு,

> சிறைவான் புனற்றில்லைச் சிற்றம் பலத்துமென் சிந்தை யுள்ளும்
> உறைவான் உயர்மதிற் கூடலின் ஆய்ந்த வொண்டீந்தமிழின்
> துறைவாய் நுழைந்தனையோ வன்றியேழிசைச் சூழல் புக்கோ
> இறைவா தடவரைத் தோட்கென் கொலாம்புகுந் தெய்தியதே?

என வினவினன் என மாண்புசால் மொழியால் மணிமொழியார் அவ் வினமொழிகளை யடுக்கி நமக்கு அழகொழுக எழுதிக்காட்டி யுள்ளார். 'உயர்மதிற் கூடலின் ஆய்ந்த வொண்தீந் தமிழ்த்துறை' எனக் குறிப்பிட்டாராயினும், இப்பாடலுட் சுட்டப் பெறுந் தலைவனும், வினவிய பாங்கனும் நம் சோழவள நாட்டில் இருந்தவர்களே யாவார்கள். எத்துணையோ ஆண்டுகட்கு முன் நம் சோழவள நாட்டில் காவிரிப்பூம் பட்டினத்தில் சோழ அரசர் பேரவையில் மாதவி மடந்தை, ஆடலாசிரியன், இசையாசிரியன், கவிஞன், தண்ணுமையோன், குழலோன், யாழாசிரியன் இவர்களின் துணைகொண்டு, துளைக்கருவி, தோற்கருவி, நரம்புக்கருவி கஞ்சக்கருவி இவைகளின் நல்லொலி கண்ட வொலிக் கேற்ப இயம்ப இனியபாட்டைப் பாடி அவ்வேழிசைச் சூழலும் இனிது தழைக்க நடித்துக்காட்டி அரசனையும் அமைச்சரையும் பிறரையும் இசையாலும் நடிப்பாலும் மகிழ்வித்தாள் என முத்தமிழ்க் காப்பியமாகிய சிலப்பதிகாரத்துள் அரங்கேற்று காதையில் ஆசிரியர் இளங்கோவடிகள் அழகுற எழுதிக்காட்டி யுள்ளனர். மாதவியாடிய அரங்கும் அவள் கையில் யாழ் தாங்கிப் பாட்டிசைத்த காவிரி நீர்த் துறையும் சோழ நாட்டிலன்றோ திகழ்ந்தன. முத்தமிழ் விரகராகிய திருஞானசம்பந்தர் தோன்றி 'நாளும் இன்னிசையாற் றமிழ்பரப்பிய' நாடு சோழநாடன்றோ? பண்மயத்த மொழியால் தன்னுளத்தைப் பற்றிய பரவைக்கும் தனக்கும் பற்றுக்கோடாயினன் இறைவனே என நம்பியாரூரர் பாடி மகிழ்ந்த திருத்தலமும் இச்சோழ நாட்டில் உள்ளதுதான்.

தமிழும் பண்ணும் இயைபுடையன எனக் கண்ட திருவள்ளுவர் 'பண்ணென்னும் பாடற்கியைபின்றேல்' எனப் பாட்டிற்குப் பண்ணைத் துணைக்கருவியாகவே கொண்டார். பாட்டிற்கு மொழி இன்றியமையாது வேண்டப்படுவதொன்று அன்று என்பார் இப்பாடலின் பொருளை ஓர்ந்துணர்வாராக! பாட்டிற் கடிப்படையா யுள்ள மொழியிருந்தன்றோ பண்நிலவவேண்டும்? மேலும் நம்பியாரூரர் 'பண்ணிடைத் தமிழொப்பாய், பழத்தினிற் சுவையொப்பாய், கண்ணிடை மணியொப்பாய்' எனச் சிறப்புற எடுத்து மொழிந்ததும் பாட்டிற்கு மொழி இன்றியமையாததென்னுங் கருத்துப் பற்றியே யாம். சுவையின்றேல் பழமின்மை போலவும், மணியின்றேல் கண்ணின்மை போலவும், தமிழின்றேல் பண்ணில்லை என்னுங் கருத்தாலன்றோ பண்ணிடைத் தமிழொப்பாய் எனப் பாடுவா ராயினர். இக்கருத்தறியார் இசைக்கு மொழி எற்றிற்கென ஓலமிடுதல் ஒவ்வாக் கூற்றன்றோ?

தமிழ் நாட்டில் குழலையும் யாழையும் மிகச் சிறப்புறப் போற்றி வந்துள்ளனர். 'குழலினிது யாழினிது என்ப தம் மக்கள் மழலைச்சொற் கேளாதவர்' என்னும் திருவள்ளுவர் கூற்றானும் இக்கூற்று உறுதி செய்யப்படும். குழல், யாழ் முதலிய இசைக்கருவிகளைக் கண்டறிந்து பயன்படுத்தி மக்கட்கு வழங்கியவர்கள் யாரென அறிவிக்கப் போந்த வடமொழியாளர்கள் சிவபெருமான், திருமால், மாதங்கி, கலைமகள், தும்புரு, நாரதர் முதலிய தேவர்கள் இக்கருவிகளைக் கண்டறிந்து பயன்பெற வழிகாட்டினர் எனக்கூறு நிற்பவும், நம் தமிழ்ச் சான்றோர்கள் பாணன், பாடினி, விறலி, கூத்தர், பறையன், துடியன், கடம்பன், இடையனெனும் பழந்தமிழ்க்குடி மக்களே இவ்விசைக் கருவிகளைக் கண்டு பயன்படுத்திப் பிறரும் பயன்பெற உதவினர் எனக் கூறுகின்றனர். இயற்கையையொட்டித் தமிழர் கூறுதலையும், செயற்கையை யொட்டி வடவர் கூறுதலையும், வடவர் கூற்று உயர்வு நவிற்சியாதலையும், தமிழர் கூற்று இயற்கை நவிற்சியாதலையும் பொழிலன்பர்கள் ஆய்ந்து உணர்வார்களாக!

தஞ்சைமா நாடு தமிழிசையைப் பண்டைக் காலந்தொட்டே வளர்த்து வந்துள்ளது. சோழ மன்னர்கள் இசைக்கலையைப் போற்றியோம்பி வந்தனர் என்பதூஉம், நாடகத்தையும் அங்ஙனமே நலமுறப் போற்றினர் என்பதூஉம் ஆகிய செய்திகளை அவர்கள் கல்வெட்டினின்றும் அறிகின்றோம். திருமுறை கண்ட சோழன் தேவாரத் திருமுறைப் பாடல்களைப் பெற்றும் அதனோ டமையாது அப்பாடல்களுக்கு ஏற்பப் பண்ணமைய இசையமைக்க நம்பியாண்டார் நம்பிகளைக் கொண்டு முயன்றான் எனின், அக்காலத்து மன்னர்கள் இசையை எங்ஙனம் மதித்துப் போற்றினர் என்பதை இம்மன்னன் செயல் கொண்டு யாம் அறியலாமன்றோ?

தில்லை மன்றினுள் திருநடம்புரியும் பெருமாற்கு இராசேந்திர சோழன் காலத்து அணுக்கி நக்கன் பாவையார் என்பவரால் நிபந்தமாகக் கொடுக்கப்பட்ட சிற்றூர்களிலுள்ள நிலங்களும் பொன்னும் பொறிக்கப்பெற்ற கல்வெட்டு ஒன்று தில்லைக் (சிதம்பரம்) கூத்தரசர்

(நடராசர்) திருக்கோயில் முதன் மதிலின் வெளிப்புறம் வடக்குப் பக்கத்தில் வெட்டப்பட் டுள்ளது. இக்கல்வெட்டில் சைவத்திரு முறைத் திருப்பதிகமாகிய திருத்தொண்டத் தொகை கோவிலில் ஓதப் பட்டுவந்த செய்தி குறிக்கப் பெற்றுளது. அங்ஙனம் ஓதிய ஓது வார்க்குக் காசு ஐந்து ஊதியமாகக் கொடுத்த செய்தியும் குறிக்கப் பெற்றுளது.

முதற் குலோத்துங்கன் காலத்துத் திருவரங்கப் பெருமாள் கோயிலில் கோயில்காரிய பாகவதர்கள் பலரும் ஒருமனப்பட்டுக் கருட வாகனனுன காலிங்கராயன் என்ற பெரியாற்கு எழுதிக்கொடுத்த ஏற்பாட்டின்படி அக் காலிங்கராயன் திருவரங்க நாதர் பொருட்டு ஐப்பசித் தேர்த்திருநாள், பங்குனித் தேர்த்திருநாள் ஆகிய இரண்டு திருவிழா நாட்களில் நடை பெறுதற்குரிய நிபந்தத்திற்காகக் கோயில் பாகவதர்கள் வைத்த பொற்காசுகளைப் பொலிசைக்கு (வட்டிக்கு) விட்டு அதனுல் அக்கட்டளைகள் நிறைவேற்றப்பெற்ற செய்தி குறிக் கப் பெற்றுள்ள சாசனம் ஒன்று திருவரங்க நாதர் கோயிலில் வெட் டப்பெற் றுளது. திருவரங்கத்தில் நடைபெறும் ஐப்பசி பங்குனி ஆகிய இரண்டு திருநாட்களில் பெருமாள் புன்னைமரத்தடியில் எழுந்தருளிய போது நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்துள் முதலாயிரப் பகுதியில் உள்ள பெருமாள் திருமொழியில் இரண்டாம் பதிகத்தில் 'தேட்டருந் திறல்'' எனத் தொடங்கும் திருப்பாசுரத்தை விண்ணப்பிக்கும் செய்தி குறிப்பிடப் பட்டுளது.

இவை இசைத்தமிழ் பற்றிய குறிப்புக்களாயினும் நாடகத் தமிழ் பற்றிய குறிப்புக்களும் நந்தமிழரசர் கல்வெட்டுக்களில் காணப் பெறு கின்றன.

இராசேந்திரன் காலத்துத் தஞ்சைப் பெரிய கோயில் வட சுவரின் வெளிப்புறத்து, தஞ்சை இராசராசேச்சுரர் கோயிலில் வைகாசி மாதத் திருவிழாவின் போது ''இராசராசேச்சுரம்'' எனும் நாடகத்தை நடத்துதற் பொருட்டு, அமைந்த கட்டளையைக் கூறும் சாசனம் ஒன்று பொறிக்கப்பெற் றுளது. இக்கட்டளையைப் பெற்று அந்நாடகத்தை நடத்துதற்கு உடன்பட்டவன் சாந்திக்கூத்து வல்ல திருமுது குன்றனுன விசயராசேந்திர ஆச்சாரியன் என்பான் எனவும் இச்சாசனம் கூறுகின்றது.

பாண்டியன் தலைகொண்ட பரகேசரி வர்மன் ஆட்சியின் நாலாம் ஆண்டில் திருவிடை மருதூர் மகாலிங்க சுவாமி திருக்கோயில் கருப்ப கிரகத்து வட சுவரில் வெட்டப்பட்ட சாசனம் ஒன்று கீர்த்தி மறைக் காடன்' என்ற 'திருவேளை அறைச்சாக்கை' என்பான் 'ஆரியக்கூத்து' என்ற கூத்தாடுதற்கு நிபந்தம்விட்ட செய்தியைக் குறிக்கிறது. மேலும் திருக்கோயில் ஊழியக் காரரும், நகரத்தாரும் அரசாங்க அதிகாரி யாகிய கோயிலை மயிலையான பராந்தக மூவேந்த வேளாரும் அமைந்த நாடக சாலை ஒன்று பண்டைக் காலத்துப் பாட்டும் கூத்தும் நிகழ் தற்கு இடனுக அந்நகரில் இருந்ததெனவும் இச்சாசனம் அறிவிக் கின்றது. இதனுல் மேலைநாட்டார் நாடகக்கொட்டில் (Drama Theatre) அமைப்பதற்கு முன்னரேயே தமிழர்கள் நாடகக் கொட்டில் அமைத்

திருந்த செய்தியை யாம் அறிகின்றோம். மேலும் இக் கல்வெட்டால் தமிழகத்தில் தமிழ்க்கூத்தே யன்றி ஆரியக்கூத்தும் திறம்பட நடிக்கப் பெற்றது எனவும் அறிகின்றோம்.

தமிழ் நூல்களுட் சிறந்ததொரு நூலாகிய **கொங்குவேளிர் மாக் கதையில்,** பிரமசுந்தர முனிவரிடம் இசைப் பயிற்சி பெற்ற உதயணன் கோடவதி என்னும் யாழினை மீட்டி விலங்குகளைத் தன்வயமாக்கும் ஆற்றல்பெற்றிருந்தான் எனவும், பகைவன் பிரச்சோதனனது நாட்டில் மதங்கொண்ட யானையை இசையால் தன் வயமாக்கினான் எனவும், அம்மன்னன் மகள் வாசவதத்தையை இசைக்கலை நலனால் மயக்கிக் களவொழுக்கம் நிகழ்த்திப் பின், தன்னுடன் அரண்மனையை விட்டுப் புறப்பட்டு வரச்செய்தான் எனவும், அங்ஙனம் புறப்பட்டு வந்தபின் அவளை மணந்து கொண்டான் எனவும் கூறப்பட்டுளது. சோழ மன்னருள் சிறந்த பாவலராகிய திருத்தக்க தேவர் இயற்றிய சிந்தா மணியுள் சீவக நம்பி காந்தர்வதத்தையை இசைப்போரில் வென்று மணம்புணர்ந்த செய்தி குறிப்பிடப் பெற்றுளது. தஞ்சையில் அரசியற் றிய அச்சுதப்ப நாய்க்கர் (*1572—1614*) காலத்தில் அமைச்சுரிமை பூண் டிருந்த கோவிந்த தீக்கதர் மகனார் **வேங்கடமகி** என்பார் **சதுர்த்தண்டிப் பிரகாசிகை** என்னும் வடவிசை நூலை இயற்றி நாய்க்கர் அவையில் அரங்கேற்றினார். கருநாடக சங்கீத மென்னும் வடவிசைக்கு இவ ரையே வழிகாட்டியாகக் கொள்ளுகின்றனர் கருநாடக இசைப் பிரியர்கள். ஷாசி மன்னர் தாமும் இசை வல்லுநராய் இருந்ததோடு இசையாளரையும் ஆதரித்து வந்தார். திருவாரூர்க் **கிரிராசகவி** இம் மன்னரது சமத்தான வித்துவானாகத் திகழ்ந்தார். இக்கிரிராசகவியின் மகனாராகிய **தியாகையர்** என்பார் சிறந்த பத்தி மேலீட்டால் தெலுங்கு வண்ணங்களைப் பாடித் தெலுங்கிசை அலை தமிழ் நாடெங்கும் மோதும்படிச் செய்தார். இவர்பால் அன்புடையார் பலர் இவர் படி மத்தைத் திருவையாற்றில் நிறுத்தி இவ்விருபதாம் நூற்றாண்டிலும் ஆரவார நீர்மையுடன் வழிபடுகின்றனர். தமிழ்நாட்டில் வழங்கி வந்த பிற்கால இசைமரபுகளை யுணர்த்தும் **குடுமியாமலைக் கல்வெட்டு** அறிஞர்களின் ஆராய்ச்சிக்குப் பெருந்துணை புரிகிறது.

தஞ்சையில் 17, 18-ம் நூற்றாண்டுகளில் ஆட்சி புரிந்த நாய்க்க அரசர்களும் மகாராட்டிர அரசர்களும் இசை வல்லோரை இங்ஙன மெல்லாம் ஆதரித்துப் போற்றி யிருக்கின்றனர். சோழவள நாட்டி னைப்பற்றிய இவ்விசைக்குறிப்புக்களை யெல்லாங் கொண்டு ஆராயின் 17, 18-ம் நூற்றாண்டுவரை ஒருவாறு தமிழிசை பலவித அல்லலுற் றும் சில குறுநிலமன்னர்களின் உதவியாலும், பேரறிவாளர்களின் துணையாலும் இறந்துபடாமல் நிலவியதெனக் கொள்ளலாம். அறி ஞர்கள் ஒருநாடு நாகரிகத்திற் சிறந்த நாடு என்பதனை அறிதற்கு அந்நாட்டின் இசை சிறந்த கருவியாகும் என்று கூறுகின்றனர். தமிழ் மொழியை இயலிசை நாடகமென முக்கூறுபடுத்தி ஆன்றோர் வழங்கி னமையாலும், இயற்றமிழ் போல இசைத்தமிழும், கூத்துத்தமிழும் இந்நாட்டில் தழைத்தோங்க வேண்டியது இன்றியமையாததாகலானும் இதுகாலைத்தமிழகம் செய்த தவப்பேற்றால் தோன்றிய **செட்டிநாட்டரசர் வீரத்திரு அண்ணாமலை வள்ளலவர்கள்** ஆயிரக்கணக்கான வெண்பொன் களைத் தமிழிசை வளன் வேண்டிச் செலவிட்டு ஆங்காங்குத் தமிழிசை

யரங்குகளை நிகழ்த்தி இசைச்சங்கம் நிறுவித் தமிழிசையைப் போற்றி வளர்த்து வருகின்றனர். தஞ்சைமா நாட்டிற்கும் இசைக்கும் உள்ள தொடர்பினை எண்ணியே நம் சங்கத்தலைவரும், இராவுசாகிபு, ஐ. குமாரசாமி பிள்ளையவர்களும் இதுபோது தஞ்சைமாவட்டத் தமிழிசைச்சங்கத்தைத் தொடங்கி யுள்ளார்கள். தமிழிசை வளர்ச்சியின் மறுமலர்ச்சியில் நாட்ட முடைய தமிழர்கள் இப் பெரியோர்கட் கெல்லாம் நன்றி செலுத்துதலோடு தமிழிசையைப் போற்றிவளர்த்து வருங் கடப்பாடுமுடையர். வாழ்க 'தமிழிசை' வாழியர் தமிழர்!

—பொழிலாசிரியர்.

## பிழைதிருத்தம்

தமிழ்ப்பொழில் துணர் இருபது மலர் எட்டு, பக்கம் 139 வரி 31, 32, 33-ல் "வீரமாமுனிவர் அவர்களும் தமிழ்மொழியின் பெருமையை மேனாட்டார் அறியும் வண்ணம் சில தமிழ் நூல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துதவினர்" என்ற சொற்றொடரை "வீரமாமுனிவர் அவர்களும் தமிழ்மொழியின் பெருமையை மேனாட்டார் அறியும் வண்ணம் திருக்குறள் அறத்துப்பாலையும் பொருட்பாலையும் லத்தீன்மொழியில் பெயர்த்துதவினர்" எனத் திருத்திக்கொள்ள வேண்டுகிறோம். மேலும் துணர் 20 மலர் 8 பக்கம் 140 வரி ஐந்தில் பரைவ வழக்கும் என்பதைப் பரவை வழக்கும் எனவும், வரி பதின்மூன்றில் ஓதியுணந்தும் என்பதை ஓதியுணர்ந்தும் எனவும் திருத்திக் கொள்ளவேண்டுகின்றோம்.

இங்ஙனம்
பொழிலாசிரியர்.

## நிகழ்ச்சிநிரல்

29—11—'44-ஆம் நாள் மாலை 5-மணிக்கு, **சர். R. K. சண்முகம் செட்டியார்** K. C. I. E. அவர்கட்குத் தஞ்சை நகர மன்றத்தினர் ஒரு வரவேற்புரை வழங்கினார்கள். இவ்வரவேற்புரையைத் தஞ்சை நகர மன்றத் தலைவரும் நம்சங்கத் தலைவருமாகிய **இராவுபகதூர் A. Y. அருளாநந்தசாமி நாடார்** அவர்கள் படித்து வழங்கிச் செட்டியார் அவர்கட்கு மாலை சூட்டினார்கள். சர். R. K. சண்முகம்செட்டியார் அவர்கள் வரவேற்புரையை ஏற்றுக்கொண்டு, தம் நன்றியறிவைப் புலப்படுக்குமுகத்தான் சில நல்லுரைகள் கூறினார்கள்.

தஞ்சை நகரமன்ற மண்டபத்தில் காலஞ்சென்ற **சர். A. T. பன்னீர்ச்செல்வம் அவர்களின் திருவுருவப்படத்தைத்** திறந்து வைத்து, சர். பன்னீர்ச்செல்வம் அவர்களின் குணநலங்களைக் குறித்து சர். R. K. சண்முகம் செட்டியார் அவர்கள் கூறியன:

திருவாளர். பன்னீர்ச்செல்வம் அவர்கள் ஒரு கத்தோலிக்கக் கிறித்தவராயிருந்த போதிலும் இந்துக்களால் மிகுதியும் போற்றப் பெற்று வந்தார். அவருடன் பலதுறைகளிலும் நெருங்கிப் பழகும் அமையங்கள் எனக்குக் கிடைத்திருக்கின்றன. அவர்தம் சொந்த முயற்சியினாலும் சீர்த்திவாய்ந்த குணங்களினாலும் மிக விரைவில் பொறுப்பு வாய்ந்த பதவியை யடைந்தார். அவர் தஞ்சை மாநாட்டிற்கும் பின்பு மாகாணத்திற்கும் வட்டமேசை மாநாட்டில் கலந்து நின்று இந்திய நாட்டிற்கும் அரிய தொண்டுகளைப் புரிந்திருக்கின்றார். நம் நாட்டின் நற்பேறின்மை காரணமாக ஒரு தனிமனிதனின் குணமோ பொதுநலத்தொண்டோ அம்மனிதனைப் பொறுத்து நன்கு மதிக்கப் படுவதில்லை. அவர் எந்த அரசியல் கட்சியைச் சேர்ந்தவர் என்பதே பொதுமக்களின் உளத்தில் ஒரு சிறந்த அளவுகோலாய் விளங்குகிறது. இக்கொள்கை மிகத்தவறுடைய கொள்கையாகும். இத்தகைய மக்களின் கொள்கையினால் சர். பன்னீர்ச் செல்வம் பல்லாருகத் தூற்றப் பட்டிருக்கிறார். ஆனால் அவர் திட்பமான கொள்கைகளையே கடைப் பிடித்து வந்தார் என மொழிந்தார்கள்.

நகரமன்ற வரவேற்பிற்கு மறுமொழி கூறுமுகத்தான் சர். R.K.S. கூறியன:— அவ்வவ்விடங்களில் அமைந்துள்ள பொது மக்களுக்கு நலன் விளைக்கும் பொது நிறுவனங்களில் (ஸ்தலதாபனங்களில்) ஏற்படும் அரசியல் கட்சிப் பிளவுகளினால் அந்நிறுவனங்கள் மிகவும் தாக்கப்பட்டு வருதல் மிகவும் வருந்துதற்குரிய செய்தியாகும். மேல் நாட்டில் இருப்பது போல, பெரும்பான்மையோர் கட்சியின் ஆட்சியின்கீழ் இத்தகைய நிறுவனங்களின் ஆட்சிப்பொறுப்பை ஒப்படைத்தல் நம் நாட்டிற்கும் நம் நிறுவனங்கட்கும் பொருத்தமற்றதென யான் எண்ணுகின்றேன். ஆதலால் இத்தகு நிறுவனங்களில் உள்ளவர்கள் கட்சிப்பற்றை ஒழிக்கவேண்டும். பொதுமக்களின் நலன்களைத் தாக்கக் கூடியதும், வளர்க்கக் கூடியதும் இத்தகு நிறுவனங்களே. கண்ணோட்டம் என்பதை மறந்து நிறுவனங்களின் செயல்களை நிகழ்த்தினால் இத்தகு பொது நிறுவனங்களின் ஆட்சி வெற்றி பெறுவது உறுதியாகும் எனக் குறிப்பிட்டார்கள்.

அதற்குப் பின்னர் மாலை 6-30 மணிக்குக் கரந்தைத் தமிழ்ச் சங்கச் சார்பில் தஞ்சைமாவட்டத் தமிழிசைச் சங்கம் சர். R. K. S. அவர்கள் தலைமையில் தொடங்கப் பெற்றது. தலைமை தாங்கி அவர்கள் கூறிய முன்னுரைச் சுருக்கம்:—

"தமிழிசைச் சங்கமானது ஓராண்டிற்கு முன்னர்தான் சென்னையில் தொடங்கப் பெற்ற போதிலும் பொதுமக்களின் உளத்தில் தமிழிசைமேல் ஆர்வம் நீண்ட காலமாகவே இருந்து வந்திருக்கிறது. தமிழிசை இயக்கம் யாதொரு அரசியல் நோக்கத்துடனும் தொடங்கப் பெறவில்லை. நான்கு ஆண்டுகளுக்கு முன்பு, நான் திருவையாற்றிற்குத் தியாகப்பிரம்ம விழாவினைத் தொடங்கி வைக்கச் சென்றிருந்தேன். தெலுங்கிசையில் எனக்கு மாறுபாடு இருந்திருக்குமேல் யான் அங்குச் சென்றிருப்பேனா என்பதை நீங்களே உணர்ந்து கொள்ளுங்கள். தியாகையர் மிகச்சிறந்த ஒரு பெரியார். அவர் இறை அன்பு மேலீட்

டால் பாட்டுக்களைப் பாடியிருக்கிறார். இசையின்பத்தினை உண்மையில் துய்க்க வேண்டுமானால் அதன் பொருள் எளிதில் விளங்கக்கூடியதாக இருத்தல் வேண்டும். இசைக்குப் பொருளும் அதன் மொழியும் இன்றியமையாதன வாகும். உடலுக்கு உயிர் எங்ஙனம் இன்றியமையாததோ அங்ஙனமே இசைக்கு மொழி இன்றியமையாததாகும். தாய் மொழியான தமிழில் இசையிருந்தால் யாவரும் எளிதில் சுவைத்துணரலாம். இதைத்தவிர தமிழிசை இயக்கம் வகுப்புப் பூசல்களைக் கிளப்பத்தொடங்கப் பெற்றதென்பது அறியாமையேயாம். உண்மையில் இவ்வியக்கத்தைத் தாக்குபவர்களே வகுப்புப் பூசல்களையும் ஒற்றுமையின்மையையும் உண்டாக்கு வதற்குப் பொறுப்பா யிருப்பவர்கள். எத்தகைய எதிர்ப்பு இருப்பினும் தமிழிசை வளர்ச்சியை எவராலும் தடுக்க வியலாது. நம் நாட்டின் நற்பேறின்மை காரணமாகச் சிலர் தமிழ்நாட்டில் இந்துத்தானி போன்ற பிறமொழி இசைக்கு ஆதரவு அளிக்கிறார்கள். ஆனால் வடநாட்டார் எவருமே கருநாடாக இசையைக் கையாளுவதில்லை.

நம் நாட்டுக் கருநாடக இசைப்புலவர்கள் டெல்லி போன்ற வடநாட்டு இடங்களுக்குச் சென்று இவர்கள் இசையரங்குகளை நிகழ்த்தினால் அவற்றை எங்ஙனம் வடநாட்டார் சுவைக்கிறார்கள் என்பது நன்கு விளங்கும் எனக் கூறினார்கள். பின்னர் இராவு சாகிபு ஐ. குமாரசாமி பிள்ளை B. A., அவர்கள் செட்டி நாட்டரசர் வீரத்திரு அண்ணாமலை செட்டியார் அவர்கள் இவ் விசைச் சங்கத் தொடக்க விழாவைச் சிறப்பிக்கு முகத்தான் ஒருஐந்நூறு (500) வெண்பொற் காசுகள் நன்கொடை யனுப்பியுள்ளதையும் வடபாதிமங்கலம் பெருநிலக்கிழவர் இராவ்பகதூர் V. S. தியாகராஜமுதலியார் M. A. அவர்கள் இவ் விசைச் சங்கவளர்ச்சிக்கு ஆவனசெய்ய உடன்பட்டுள்ளதையும் குறிப்பிட்டு சர். R. K. சண்முகம்செட்டியார் அவர்கள் தம் வற்புறுத்தலுக் கிணங்கி இவண்போந்து இச்சங்கத் திறப்பு விழாவாற்றிச் சிறப்பித்தமைக்கு நன்றி தெரிவிப்பதாகவுங் கூறினார்கள். பின்னர், தளவாய்பாளையம் இனாந்தார், பள்ளியகரம் திருவாளர் நீ. கந்தசாமிபிள்ளை அவர்கள் நன்றி கூறினார்கள். இசைப் பேராசிரியர் க. பொன்னையாபிள்ளை அவர்கள்மகனார் சிவானந்தம் அவர்களின் வீணைவாசிப்புடன் இசைச் சங்கம் இனிது தொடங்கப்பெற்றுக் கற்கண்டு சந்தனம் வெற்றிலை முதலிய வழங்கப்பெற்றுத் தமிழ்த்தாய் வாழ்த்துடன் தொடக்கவிழா இனிது நிறைவேறியது.

அண்ணாமலைப் பல்கலைக் கழகப்பேரவைக்கு (Senate) நம் சங்கச் சார்பில் நம் சங்கப் பேரன்பரும், தளவாய்பாளையம் இனாந்தாரரும் ஆகிய பள்ளியக்ரகாரம் திரு. நீ. கந்தசாமி பிள்ளை M. R. A. S. அவர்கள் ஒருறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்கள்.

இங்ஙனம்

**A. Y. அருளாநந்தசாமிநாடார்,**

சங்கத்தலைவர்.

பெருந்திருவாளர்

**வீரத்திரு. R. K. சண்முகம் செட்டியார்**

B. A., B. L., K. C. I. E.,

அவர்கட்கு,

கரந்தைத் தமிழ்ச் சங்கத்தா ரளித்த

# * வாழ்த்திய லின்னுரை

மழைதோயு மாடங்கள் மலிகோவை மாநகரின் மன்ன! எங்கள்
விழைவாய தமிழ்க்கோயில் வீறுரிக் கரந்தையினில் விளங்க நன்றே
மழைசார்ந்தே தமிழ்ப்பயிர்தான் வளர்ந்தினிநும் வருகையினால் வளன்கொண் டார்க்கும்
விழைவோங்க நலன்கொழிக்க விறலார் சண் முக!வருக|! வேந்தே!!! வாழி!!!!

ஆசியா ஆப்பிரிக்கா அமெரிக்கா ஐரோப்பா அவற்றோ டொன்றப்
பேசிடும்ஆஸ் டிரேலியா பெருங்கண்ட மைந்துமிகப் பெட்போ டேத்திப்
பேசுமொரு பெருந்தமிழன் பெருமகன்எம் சண்முகப்பேர் பெற்றோ னென்றே
தேசுயரத் தமிழர்கடாந் தெரிந்துரைத்துப் பெருமைகொளும் சீர்சால் கோவே!

எவ்வுலக அறிஞர்களும் இனிதமைந்த பேரவையில் இருந்து நன்றே
ஒவ்வுமுயர் செயலிவைகள் ஒவ்வாதிச் செயல்களென ஓர்ந்து கூறி
ஒவ்வுநல ஆட்டாவா ஒப்பந்தஞ் செய்தமைத்த உரனார் செல்வ!
செவ்வியநற் றமிழ்வளர்க்கச் சீர்வசந்தம் தனைவளர்ப்போய்! செம்மால்!! வாழி!!!

மன்பதைக்கிங் குயிரெனலாம் மாலுலகச் செலவாணி மாநாட் டுள்ளே
அன்ப!நின தாய்வுரையும் அருந்திறலும் நுண்ணறிவும் ஆய்ந்து நின்றே
என்மொழிவே மிந்தியர்தம் இடித்துரைக்கென் றமெரிக்கா ஏங்க நன்றே
சொன்மொழிந்த சண்முக!எம் சொற்கொண்டால்!! தமிழர்களின் தோன்றால்!!!வாழி!!!

இந்தியா சட்டசபை ஏற்பட்ட நாண்முதலா இந்நாட் டுள்ளோர்
எந்தவழி வகைகொளினும் எழிற்றலைமை வடநாட்டார் ஏற்கக் கண்டோம்;
அந்தவுயர் மன்றத்தின் அழகியநற் றலைமைகொடிங் கவனி போற்றச்
சந்தமுறத் தமிழர்கடந் தமிழாற்ற லறிவித்தாய்! சான்றோய்!! வாழி!!!

இயற்றமிழோ டினிதொன்றி இசைத்தமிழும் வளர்ந்தோங்க இனிதின் ஆய்ந்து
முயற்றிடுமோர் அரசண்ணா மலைவள்ளல் முன்னிநனி முனைந்து நாட்டி
இயற்றிசையார் இசைச்சங்கம் இனியபணி செய்துயர்ந்தே எவரும் போற்றப்
பயிற்றுறுநல் லுயர்பணிகள் பாருவக்கச் செய்துவரும் பண்போய்! வாழி!!

கரந்தைநகர் வளர்சங்கம் கவிஞாரின் னுயிரென்னக் கருதி நின்றே
ஒருமனதோ டிச்சங்கம் உயரவழி வகைகண்ட உமாம கேசர்
பெருமைசெறி தமிழவேள் பிரிந்திட்டா ரவர்பிரிவாற் பெரும்பே துற்றேம்
கருதிடுமெக் குறைநீக்கிக் கவின்சங்கந் தனையுயர்த்திக் காப்பாய்! வாழி!!

எஞ்சங்கம் வளர்த்துவரும் எழிற்புலவர் கல்லூரி ஏய்ந்த பெற்றி
விஞ்சிடுபல் கலைக்கழக வீறுறுநன் னிலையுற்று மேலோர் போற்ற
எஞ்சலிலா வகைவளர்ந்தே எவ்வுலகக் கலைகளுங்கொண் டெழில்பெற் றோங்க
மஞ்சுதோய் மாடங்கள் மலிகோவை மன்னவ! நீ வளர்ப்பாய்! வாழி!!

---

*இப்பாக்களை இயற்றியவர், பொழிலாசிரியர் கோ. சி. பெரியசாமிப் புலவர்.

கொச்சியினிற் றிவான்பதவி கொண்டொளிர்ந்த கோவைநகர்க் கோவே யாங்கள்
நச்சியிருந் திவண்போற்றும் நம்பன்னீர்ச் செல்வமவர் நாளும் போற்றி
மெச்சியுயர் தமிழ்வளர்த்த மேன்மைசெறி இச்சங்கம் வீறு தோன்ற
இச்சையுற நினைவரவேற் றியன்மொழிகள் வழங்கல்மிக எற்ற மாமே!

வாழியசர் சண்முகன்றன் வளர்மனையு மக்களெலாம் வாழி! வாழி!!
வாழியுயர் தமிழர்களின் வாகையணி பெருந்தலைவன் வாழி! வாழி!!
வாழி யிவன், தமிழ்வளர்த்து வளர்பதவி பெற்றுயர்ந்து வாழி! வாழி!!
வாழியிவண் கரந்தைநகர் வளர்சங்கம் என்றென்றும் வாழ்க! மாதோ!!

கரந்தைத் தமிழ்ச் சங்கம்,
தஞ்சை,
29—11—44.

இங்ஙனம்,
**A. Y. அருளாநந்தசாமி நாடார்,**
சங்கத்தலைவர்

## அறிவிப்பு

தமிழ்ப் பொழிலுக்குக் கட்டுரை யனுப்பு கின்றவர்களும், சந்தாப் பணம் அனுப்பு கின்றவர்களும், மதிப்புரைக்கு நூலனுப்புகின்றவர்களும் 'கோ. சி. பெரியசாமிப்புலவர் "தமிழ்ப்பொழில்" ஆசிரியர், கருந்திட்டைக்குடி P. O. தஞ்சாவூர்' என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டுமாய் அறிவிக்கின்றேம். பொழிலின் மதிப்புரை வேண்டுவோர் மதிப்புரைக்கு நூலனுப்பும்போது இரண்டு படிகள் அனுப்பியுதவ வேண்டுகின்றேம். சங்கவெளியீட்டு நூல்களை விலைக்கு வாங்க விரும்புவோர் சங்கப் பொருளாளர்க்குப் பொருளனுப்ப வேண்டுகின்றேம்.

இங்ஙனம்,
பொழிலாசிரியர்.

## மகிழ்ச்சி

திருக்கொளம்பூதூர்த் திருப்பணிச் செல்வரும் கோனூர்ச் செமீன்றாரும், நம்சங்கப் புரவலருமாகிய திருவாளர் **பெ. ராம. சித. சிதம்பரஞ் செட்டியார்** எம். எல். சி., அவர்கள் புதுக்கோட்டைச் சட்டமன்றத் துணைத்தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றமைகேட்டு மிக்கமகிழ்ச்சி யடைகின்றோம். தமிழ்வளன் பேணும் இத்தக்கார் மேன்மேலுயர்ந்து பற்பல பதவிகள்பெற்றுச் சிறப்புறத் தமிழன்னையை வழுத்துகின்றோம்.

நம் கரந்தைப்புலவர்கல்லூரி மாணவர் களாகிய R. சுந்தரராசன், M. சுந்தரேசன் ஆகிய இருவரும் அண்மையில் நிகழ்ந்த சைவப்புலவர் தேர்விற்குச் சென்றெழுதி இருவரும் தேர்வில் வெற்றிபெற்றனர். சுந்தரராசன் அவர்கட்கு இரண்டாம்பரிசு கிடைக்க விருக்கின்றமை கருதி மகிழ்கின்றோம்.

பொழிலாசிரியர் கோ. சி. பெரியசாமிப்புலவர் தலைமையில் தமிழ் மணம் புணர்ந்த கரந்தைப் புலவர் கல்லூரித்தலைவர் திரு. பண்டித P. R. மீனாட்சிசுந்தரம் M. A., அவர்கட்கு 16—12—'44 பகல் ஒன்றரை மணிக்கு ஒரு பெண் மகவு பிறந்துளது. தாயும் மகவும் நலமேயுள்ளனர். செல்வி நன்றே வளர்ந்து நலன்பெற வாழ்த்துகின்றோம்.

# அம்மூவனார்.

வித்துவான், சி. இலக்குவனார் அவர்கள் B. O. L.

(முற்றொடர்ச்சி துணர் 20 மலர் 8 பக்கம் 152)

ஞெண்டு, அறவன், புனவன், ததர் தெனவல் முதலிய சொற்கள் இக்கால நூல் வழக்கினும் காணப்பெறா. 'தெய்ய' அசைச்சொல் இவர் பாடலில் காணப்படுகின்றது. தொல்காப்பியத்தில் கூறப்பட வில்லை ஆயினும், அவர் அறியாமலும் சில சொற்கள் இருத்தல் கூடு மென்றே

" கிளந்தவல்ல வேறுபிற தோன்றினும்
கிளந்தவற் றியலான் உணர்ந்தனர் கொளலே "

என்று கூறினார். இவர் பாடல்களில் வடசொற்கள் பயிலப்பெற வில்லை. ஆயினும், உலகம், காமம், சகடம், தெய்வம், கணம் முதலிய தமிழ்ச் சொற்களை வடசொற்களென்று கூறுவார் உளராதலின், அவற்றைப்பற்றி ஆராய்வோம்.

**உலகம்:—** 'லொகம்' என்ற வடசொல் 'உலகம்' என்று ஆயிற்று என்பர். மொழி ஆராய்ச்சியாளர்கள் 'உலகம்' என்ற சொல்தான் 'லோகம்' ஆதல் கூடும் என்கின்றனர். தமிழ் 'உள்' என்ற சொல் தெலுங்கில் 'லோ' என்றும், 'உரல்' என்ற சொல் 'ரோலு' என்றும் ஆகின்றமையின், 'உலகம்' என்ற சொல்தான் 'லோகம்' என்று திரிந்து இருத்தல்கூடும் என்பர் மொழிநூல் வல்லுநர்.

**காமம்:—** விருப்பப் பொருள்தரும் 'காம்' என்ற சொல்லினடி யாகத் தோன்றியது.

" கற்போர் நெஞ்சம் காம் உறப்படுதலும் " (பேராசிரியன்)

" தாமின்புறுவது உலகின் புறக்கண்டு
காம்உறுவர் கற்றறிந்தார் " (திருக். 399.)

என்ற இடங்களில் 'காம்' என்ற சொல் விருப்பம் என்ற பொருளில் வந்திருப்பதைக் காண்க. ஆகவே, 'காம்' என்ற சொல்லே பின்னர் 'அம்' விகுதிபெற்ற 'காமம்' என்று ஆயிற்று 'நாம்' 'நாமம்' ஆனது போல்.

" பேம் நாம் உரும் என வரூஉம் கிளவி
ஆமுறை மூன்றும் அச்சப்பொருள "

என்ற தொல், நூற்பாவில் 'நாம்' அச்சப் பொருளில் வரும் என்று கூறுவதைக் காண்க. பின்னர், திருக்குறளில் 'நாம நீர் வைப்பில்' (குற. 149) என்பதில் 'நாமம்' என்று பயில்வதைக் காண்கின்றோம். 'காமம்' முதலில் விருப்பத்தைக் குறித்துப் பின்னர் எல்லாராலும் பெரிதும் விரும்புதற்குரிய (1) பாலின்பத்தைக் குறித்து நின்றது. தொல்காப்பியத்திலும் சங்க இலக்கியங்களிலும் திருக்குறளிலும்

பாலின்பத்தைக் குறிப்பதற்கு இச்சொல் ஆளப்படுவதைப் பெருவழக்காகக் காணலாம். பின்னர் மிகுந்த 'பற்றுள்ள'த்தைக் குறித்தது. இக்காலத்து, பாலின் பத்துள் அளவுகடந்த தகாத விருப்பத்தைக்குறித்து இழிபொருள் தருகின்றது. உயர்பொருள் தந்தசொல் இழிபொருள் தருதலும் இழிபொருள் தந்தசொல் உயர்பொருள் பெறுதலும் எம்மொழியிலும் காணக்கூடியதே. இச்சொல் 'அர்'விகுதிபெற்று (காம் + அர்) 'காமர்' எனவிருப்பப் பொருளில் வருதலும் உண்டு.

**சகடம்:—** 'கோடகம்' 'கடகம்' என்று திரிந்து பின்னர் சகடம் ஆயிற்றென்பர் திருவாளர் ஞானப்பிரகாசர். அவர் கருத்துப்படி இது தமிழ்ச் சொல்லே. 'சாகாடு' சகடம் ஆயிற்று என்றலும் பொருந்தும். வண்டியை 'சாகாடு' என்றகாரணம் தோன்றவில்லை.

'மொழிப் பொருட் காரணம் விழிப்பத்தோன்ற'

என்றதூஉம் காண்க.

**தெய்வம்:—** வடமொழியில் 'திவ' என்ற வேரிலிருந்து 'தேவ' என்ற சொல் உண்டாயிற்றென்பர். 'திவ' என்றால் 'ஒளி' என்னும் பொருளாம். நந்தமிழ்ச் சொல்லோ அப்பொருளுடைத்தன்று. அவ் வேரினின்றும் தோன்றியதும் அன்று.

'தேய்' என்ற வேரினின்றும் 'தெய்வம்' தோன்றியுள்ளது. கடவுள் பிறவியைத் தேய்த்தலால் கடவுளுக்குத் தெய்வம் என்று பெயரிட்டனர் தமிழர்.

நாம் ஈண்டு ஆராய்ச்சிக்கு எடுத்துக்கொண்ட 'உலகம்' 'தெய்வம்' என்ற இரு சொற்களும் தமிழ்ச் சொற்கள்தாம் என்பது தொல்காப்பியர்க்கும் உடன்பாடாகும் என்பது அவர் கூறும் பின்வரும் நூற்பாவால் அறியலாம்.

காலம் உலகம் உயிரே உடம்பே
பால்வரை தெய்வம் வினையே பூதம்
ஞாயிறு திங்கள் சொல்லென வருஉம்
ஆயீரைந்தொடு பிறவும் அன்ன
ஆவயின் வருஉங் கிளவி எல்லாம்
பால்பிரிந் திசையா உயர்திணைமேன. (தொல். சொல்.61)

தமிழ்ச் சொற்களென்று கருதாவிடின் இங்கு இலக்கணம் கூறுவாரா? கூறாரன்றே, வடசொற்கட்கு அவர் இலக்கணம் கூறப் புகவில்லையாதலின்.

**கணம்:—** கூட்டம் என்னும் பொருளது. 'கண்' என்ற சொல் இடம் என்ற பொருளில் வருகின்றது. 'அம்' விகுதிபெற்று அவ்விடத்துக் கூடும் கூட்டத்தைக் குறிக்கின்றது. கூட்டம் கண்ணுக்கு மிக்குத்தோன்றுகின்றமையின், சிறப்புப்பற்றி 'கணம்' என்று ஆயிற்றென்னலாம். நிலைத்து நிற்பதற்குரியது நிலம் ஆனாற்போல காண்பதற்குறியது 'கணம்' ஆயிற்றுப்போலும்.

தமிழ்ச் சார்பு வடமொழிக்கு ஏற்பட்ட பின்னர்தான், ட. ண. எழுத்துக்கள் வடமொழியில் இடம்பெற்றனவென்று மொழிநூலார்

கூறுகின்றமையின் 'கணம்' என்றசொல் தமிழ் என்பதற்குத் தடையின்று. ஆகவே, ஒரு வடசொல்கூட இவர் பாடல்களில் இல்லை என்று அறிகின்ருேம். இவ்வாறு பல புலவர்கள் பாடியுள்ளார்கள். அங்ஙனமாகவும்,

அன்றியும் தமிழ் நூற்களவிலே யவற்றுள்
ஒன்றேயாயினும் தனித்தமிழ் உண்டோ?
அன்றியும் ஐந்தெழுத்தாலொரு பாடை யென்று
அறையவும் நாணுவர் அறிவுடையோரே
ஆகையால் யானும் அதுவே யறிக. (இ. கொத்து)

என்று ஒருவர் கூறுவது பொருள்பற்றியா? சொல்பற்றியா? பொருள் பற்றி ஆராயினும் சங்க இலக்கியங்கள் சிலப்பதிகாரம், மணிமேகலை முதலிய பண்டை நூல்களும் பெரிய புராணம் போன்ற பிற்கால நூல்களும் வடமொழியினின்றும் மொழிபெயர்க்கப் பட்டனவல்லவே. சொல்பற்றி, வடசொல் கலவாதநூல் இல்லை என்ருரெனின் அம்மூவன் போன்ற பல புலவர்கள் பாடியுள்ளனரே. அன்றியும் வடசொற்கலப்பதால் இழுக்கென்னை? ஒருமொழியாளர் வேறு மொழியாளருடன் கூடிக்குலவுங்கால் இருசாரார் மொழியும் கலக்கப்பெறுவது இயல்புதானே. தமிழ்ச்சொற்கள் வடமொழியின்கண் ஏறவில்லையா? அவரும் தமிழரே ஆதலின் மன்னித்து விடுக.

**காலம்:—** வடசொற்கள் கலக்கப்பெருததால் **வடமொழியாளர் கூட்டுறவு ஏற்படுவதற்கு முன் இயற்றப்பட்டது** என்னலாம். இப்போது தமிழ் நூல்களில் மிகவும் முற்பட்டது தொல்காப்பியம் என்கின்றனர். அத்தொல்காப்பியத்திற்கு இது முற்பட்டதா பிற்பட்டதா என ஆராய்வோம். 'தேம்' என்றசொல், இடம், நாடு என்றபொருளில் பண்டை இலக்கியங்களில் பயின்றுள்ளது. அச்சொல் அசைநிலைக்காகவும் இசைநிறைக்காகவும் அளபெடுத்து 'தேஎம்' என்று நின்றுளது. பின்னர் தே + எம் எனப்பிரிந்து, உடம்படுமெய் 'ய' பெற்று தெயெம் எனத்திரிந்து தேயம் என மாறிற்று. தேயம் பின்னர் தேசம் ஆயிற்று. 'உயரம்' உசரம் என்றும், 'புயல்' புசல் என்றும், ஆனது போல் இச்சொல் மாற்றவளர்ச்சிகொண்டு நம் அம்மூவன் காலத்தை ஒருவாறு உறுதிப்படுத்தலாம். அம்மூவன் 'தேஎம்' என்று ஆளுகின்ருர். ஆனல் தொல்காப்பியரில்,

"ஊரது சார்வும் செல்லும் தேயமும்" (985)
"நெறியின் ஆற்றிய அறிவன் தேயமும்" (1070)

என்ற இடங்களில் 'தேயம்' என்று ஆள்வதைக் காண்கின்றேம்.

## * பாணன் வருகை

### பெரும்பா ணாற்றுப்படை

பண்டித, P. R. மீனாட்சி சுந்தரம் அவர்கள் M. A.
கரந்தைப் புலவர்கல்லூரித் தலைவர், கரந்தை.

(முற்றொடர்ச்சி துணர் 20 மலர் 8 பக்கம் 157)

இந்த யாழின் இயல்பினை,

" பாசிலை யொழித்த பராஅரைப் பாதிரி
வள்ளிதழ் மாமலர் வயிற்றிடை வகுத்ததன்
உள்ளகம் புரையும் ஊட்டுறு பச்சைப்
பரியரைக் கமுகின் பாளையம் பசும்பூக்
கருவிருந் தன்ன கண்கூடு செறிதுளை
உருக்கி யன்ன பொருத்துறு போர்வைச்
சுனைவறந் தன்ன இருள்தூங்கு வறுவாய்ப்
பிறைபிறந் தன்ன பின்னேந்து கவைக்கடை
நெடும்பணைத் திரள்தோள் மடந்தை முன்கைக்
குறுந்தொடி யேய்க்கும் மெலிந்து வீங்குதிவவின்
மணிவார்ந் தன்ன மாயிரு மருப்பின்
பொன்வார்ந் தன்ன புரியடங்கு நரம்பின்
தொடையமை கேள்வி "—

என்று உருத்திரங் கண்ணனார் விளக்கியுள்ளார். செவியார இன்னிசையை ஊட்டி, கேட்குங்காலத்தே ஒலியின் வேறுபாடு கொண்டு சீறியாழ் பேரியாழ் என்ற பிரிவு காணுமாறு அமையப் பெற்றிருந்ததால் யாழைக் **கேள்வி** யென்றே ஆசிரியர் குறிக்கின்றார்.

செவ்விய இசையூட்டும் பெரும்பாணனை அரசர் மட்டுமே போற்றினர் இல்லை. இளந்திரையன் நாட்டிருந்த ஐந்திணைவாழ் மக்கள் எல்லோரும் அவனுக்குச் சிறப்புச் செய்து அவனுடைய இசையை மாந்தி இன்புற்று இனிய உண்டி, உடை முதலியவற்றால் அப் பெரும்பாணனைப் பேணி அரசனிடத்துச் செல்லும் வழியில் உண்டாகும் துன்பம் துடைத்தனர் என்று புலவர் பொறிக்கின்றார். பாணன் வருகின்ற வழியிலே,

" வாடா தட்ட வாடூன் புழுக்கலும் "

" சுவல்விளை நெல்லின் செவ்வவிழ்ச் சொன்றி
ஞமலி தந்த மனவுச்சூல் உடும்பின்
வறைகால் யாத்ததும் "

" இருங்கிளை ஞெண்டின் சிறுபார்ப் பன்ன
பசுந்தினை மூரல் பாலொடும்,"

---

*20—9—'44 அன்று திருச்சி வானொலியில் பேசியது.

"நெடுங்குரல் பூளைப் பூவின் அன்ன
குறுந்தாள் வரகின் குரலவிழ்ச் சொன்றிப்

"புகரிணர் வேங்கை வீகண் டன்ன
அவரை வான்புழுக் கட்டிப் பயில்வுற்ற
இன்சுவை மூரலும்"

"மடியா, வினைஞர் தந்த வெண்ணெல் வல்சி
மனைவாழ் அளகின் வாட்டொடும்"

"கரும்பின் தீஞ்சாறும்"
சேதா நறுமோர் வெண்ணெயின் மாதுளத்து
உருப்புறு பசுங்காய்ப் போழொடு கறிகலந்து
கஞ்சக நறுமுறி யளைஇப் பைந்துணர்
நெடுமரக் கொக்கின் நறுவடி விதிர்த்த
தகைமாண் காடியும்,"

"பன்மயிர்ப் பிணவொடு பாயம் போகாது
நென்மா வல்சி தீற்றிப் பன்னாள்
குழிநிறுத் தோம்பிய குறுந்தாள் ஏற்றைக்
கொழுநிணத் தடியொடு கூர்நறவும்"—

பெறுகின்றான்.

இது காறும் கூறிய வாற்றால் பழங்காலத்து இசைவாணர் பாணர் என்பதூஉம், அவருள் பெரும்பாணன் ஒருவனை இளந்திரையன் மாட்டு ஆற்றுப்படுத்தலே பெரும்பாணாற்றுப் படையாகு மென்பதூஉம், அவன் வைத்திருந்த யாழின் நுணுக்கமான தன்மையும், இளந்திரையனிடத்துப் பெற்ற பரிசிலும் வியக்கத்தக்கன என்பதூஉம், நாட்டுமக்கள் அனைவரும் இசையறி இன்கலையாளராய்த் திகழ்ந்து அப்பாணனைப் போற்றினர் என்பதூஉம், ஆகிய செய்திகள் தொகுத்துரைக்கப் பெற்றன.

இசையில் ஒன்றி மக்கள் அல்லாப் பிற இயற்கைப் பொருள்களும் தீமை செய்யாது நன்மையே செய்யும் என்று அறிவிக்கின்ற உருத்திரங்கண்ணனாருடைய சொற்களோடு முடிக்கின்றேன்.

"உருமும் உரறாது அரவுந் தப்பா
காட்டு மாவும் உறுகண் செய்யா வேட்டாங்கு
அசைவுழி யசைஇ நசைவுழித் தங்கிச்
சென்மோ இரவல சிறக்கநின் உள்ளம்"—

என்பன அவர் கூறியனவாம்.

இத்தகைய இன்னிசை பரப்பிய பெரும்பாணரை என்றினி எந் தமிழகத்துக் காண்பேம்!

## வருந்துகின்றோம்

நம் சங்கப் பேரன்பரும் சங்க நிறைவேற்றுக்கழக உறுப்பினராக விருந்து பல்லாண்டுகள் பணியாற்றியவரும், பொறிவலாளர் (Engineer) அலுவலில் இருந்து பணியாற்றி ஓய்வுபெற்றுத் தஞ்சைப் புதுநகரில் (New Town) வாழ்ந்து வந்தவருமாகிய திருவாளர் நா. கந்தசாமி பிள்ளை அவர்கள் 7—12—44 காலை இறைவன் திருவடி நீழல் அடைந்தமைகேட்டு மிகவருந்துகின்றோம். இவர்கள் மறைவு கருதி நம்சங்க உறுப்பாயுள்ள கரந்தைப் புலவர் கல்லூரி, உமாம கேசுவரர் நடுத்தரப்பள்ளி, இராதாகிருட்டினத் தொடக்கப்பள்ளி ஆகியநிலையங்கள் பிற்பகல் விடுதியளிக்கப் பெற்றன. விடுதிக்குமுன் சங்கப் பெருமன்றத்தில் கரந்தைக்கவியரசு R. வேங்கடாசலம்பிள்ளை அவர்களால் மறைந்த பெரியாரின் குணநலங்களைக் குறித்து ஒரு சொற்பொழி வாற்றப் பெற்றது. தளர்ந்தவயதிலும் சங்கத்தின் ஆக்கம் கருதிப் பல்லாற்றானும் பணியாற்றி வந்த நம்பிள்ளையவர்களின் இன்னுயிர் இறைவன் திருவடி நீழலில் இன்புற்றுத்திளைக்க இறைவனை வழுத்துகின்றோம். இவர் பிரிவால் வருந்தும் இவர்குடும்பத்தார்க்கு எம்ஆழ்ந்த துயரினை அறிவித்துக் கொள்கின்றோம்.

## திரு. C. D. நாயகம் மறைந்தார்

சென்னைமண்டிலக் கூட்டுறவுக்கழகத் துணை ஆவண ஆணையாள ராகவும் (Co-operative Deputy Registrar) சென்னைமண்டிலச் சட்ட மன்ற உறுப்பினராகவும், தமிழ் நாட்டுத் திராவிடர் கழகச் செயற் குழு உறுப்பினராயும், திருநெல்வேலி மாவட்டஆட்சிக்கழக உறுப்பின ராகவும், திருநெல்வேலி வட்டத்தின் போர்முன்னணி மதிப்புத் தலைவ ராகவும், திருநெல்வேலி தென்னிந்தியக் கருவூலத்தின் (South Indian Bank) தலைவராகவும் திகழ்ந்தவரும், குலசேகரப் பட்டினத்தில் தாயம்மாள் பெண்பள்ளியைத் தோற்றுவித்து நாற்பதியாண்டுகளாக நடத்தி வந்தவரும், சென்னைத் தியாகராய நகரில் தொடக்கப்பள்ளி நடுத்தரப்பள்ளி ஆகியவற்றைத் தோற்றுவித்து நடத்தி வந்தவரும் தம்பொருள் முழுதையும் குலசேகரப் பட்டினம் தமிழ்க் கல்லூரிக்கு ஒப்படைத்து உழைத்து வந்தவருமாகிய தமிழர் தலைவர், திருவாளர் C. D. நாயகம் அவர்கள் 13—12—'44 ஆம் நாள் தமது 66-ஆம் அகவையில் இயற்கை எய்திய செய்தி கேட்டு மிக மிக வருந்துகின் றோம். இவர் பிரிவால் வருந்தும் இவர் குடும்பத்தார்க்கு எம் ஆழ்ந்த துயரினை அறிவித்துக் கொள்கின்றோம்.

நம் தமிழ்ப்பொழில் எழுத்துக் கோப்பவராய் இருந்து சிறந்த முறையில் தொண்டியற்றி வந்த திரு. மகாதேவராவ் அவர்கள் 11—12—'44 ஆம் நாள் காலையில் இறைவன் றிருவடி நீழல் அடைந் தமை கேட்டு மிக மிக வருந்துகின்றோம். இவர் பிரிவால் வருந்தும் இவர்குடும்பத்தார்க்கு நம் துயரினை அறிவித்துக் கொள்ளுகின்றோம்.

இங்ஙனம்

பொழிலாசிரியர்.

பெருந்திருவாளர்

## வீரத்திரு. R. K. சண்முகஞ் செட்டியார்

B. A., B. L., K. C. I. E., அவர்கள்

## தஞ்சைமா வட்டத் தமிழிசைச் சங்கத் திறப்பு விழாவில்

தலைமை தாங்கிய காலையில்

தஞ்சைமா வட்டத் தமிழிசைச் சங்கத்தா ரளித்த

# இயன்மொழி வாழ்த்துரை.

**கோவைமா நகரின் கோவே! வருக!!**
**வருக!! வருக!! நும்வரவு நல்வர வாகுக!!**

தஞ்சையம்பதியின் விஞ்சிய இசையார் தமிழிசைச் சங்கம் சால்புறத் தழைக்கத் தலைமைதாங்குதற்குத் தாங்கள் ஒருப்பட்டு இவண் போந்தமைக்கு யாங்கள் யாது செயலாற்ற வல்லேம்!

**அறிவின் பிழம்பென அமைந்தொளிர் செல்வ!**

தாங்கள் இந்திய ஞாயிறெனத் தோன்றி அரசியலில் அறிவொளி ஒளிவீசி வருதலையுணர்ந்த ஆங்கில அரசாங்கத்தார், தங்களைத் துணையாகக்கொண்டு ஆட்டாவா ஒப்பந்தம் செய்தமைத்தனர். அமெரிக்காவிற்குச் சென்று பொருள் வாங்குதற்குத் தங்களை, இந்தியாவின் சார்பில் அமெரிக்காவிற்குச் சென்ற குழுவின் தலைவராய்த் தேர்ந்தனுப்பினர்.

**பொருளாதாரத் துறையில் தலைமைசான்ற அறிவுபெற்றுப் போராட்டுரை நவில் பொருவிலாப் பெரியீர்!**

இந்தியா தந்துதவிய, இங்கிலாந்தில் இருப்பாக உள்ள நிதி (Sterling fund) யின் சார்பாகப் பேசுதற்கு அமெரிக்காவில் நிகழ்ந்த உலகச் செலவாணி மாநாட்டில் அமையங் கிடைத்தபொழுது அந்நிதியை இந்தியா நியாயமான முறையில் அடையத் தாங்கள் போராடியசெயலை உலகம் மறத்தற் கியலுமோ? தங்களைப்போன்ற பெருநாவலர்கள் அவ்வுலகச் செலவாணிமாநாட்டில் இடம்பெறவில்லையாயின் இந்தியாவின் நியாயமான வேண்டுகோளை உலகம் அறிய வாய்ப்பேற்படுமோ? இங்ஙனம் உலகெலாம் இந்தியாவின் நியாயமான கொள்கையினை யறிந்துகொள்ளப்போரிட்ட பெரியாராய தங்களை யாங்கள் உளமாரப் பாராட்டி வாழ்த்துகின்றேம்.

**இந்தியா சட்டசபையின் எழில்மிகு தலைவராகத் திகழ்ந்த ஏந்தலே!**

இந்தியா சட்டசபை ஏற்பட்ட நாண்முதலாக வட நாட்டினர் தலைமை ஏற்று மகிழ்வடையத் தாங்கள் வடவர்க்கின்றித் தமிழரும் அப்பதவியிலமைந்து தகவுடன் நடத்தி உலகம்புகழச் சால்புறப் பணியாற்றுவர் என்பதனை உலகறியத் தலைமைதாங்கி உணர்த்தினீர்கள்.

தங்கள் அறிவாற்றலை உலகம் நன்கு உணர்ந்துள்ளதாகையால் தங்கள் அறிவாற்றலைக் குறித்து, யாம் என் கூறவல்லேம்!

**இசைத்தமிழ் வளர்த்திடும் ஏந்தலே! வருக!!**

இசைத் தமிழ்க்கு உயிரளிப்பான்வேண்டித் தாங்களும் அரசர் அண்ணாமலை வள்ளல் அவர்களும் அரிதின்முயன்று சென்னையில் தமிழிசைச் சங்கத்தை நாட்டிப் பெரும்பொருள் திரட்டி இருப்பு நிதியாக்கித் தமிழிசையை வளர்ச்சியுறச் செய்ய இசையரங்குகள் நிகழ்த்தி இசைப்புலவர்களைத் தமிழ்ப் பாடல்களையே பாடச்செய்து, இன்னிசைப்பணி யாற்றி வருகின்றீர்கள். "இசையென்றால் தெலுங்கு; தேசியம் என்றால் ஹிந்தி; புரோகிதம் என்றால் வடமொழி"யென இந்நாடு பிறமொழிக்கு எல்லாத் துறைகளிலும் அடிமைப்பட்டிருப்பதைத் தாங்கள் இசைத்தமிழ் மாநாட்டில் எடுத்துக்காட்டினீர்கள். தாங்கள் தமிழிசையரங்குகளின் மூலம் தமிழர்க்குத் தனிப்பேருணர்ச்சியை ஊட்டிவரும் தகைசால் செயற்கு யாங்கள் யாது கைம்மாறு செய்ய வல்லேம்?

**தஞ்சைமா நகரும் தமிழிசை வளனும்.**

சிலப்பதிகார உரையிற் காணப்பெறும் இசை யியல்புகளையும், இசைக்கருவிகளின் இலக்கணங்களையும், இசைக்குறியீடுகளையும், கூத்து, கூத்தியல் விகற்பங்களையும், இவைபற்றிய இலக்கிய இலக்கண நூல் களையும் இழந்து அந்நூலுரையிற் கூறப்பெறுவனவற்றை அறிந்து கொள்ள வாய்ப்பில்லாதவர்களானோமாகையால், அடியார்க்கு நல்லார் உரையின் பொருளை அறியாதவர்களாகவுள்ளோம். இவற்றை யெல்லாம் ஓர்ந்துணர்ந்து தஞ்சைமாநகரில் வாழ்ந்த பெரியாராகிய காலஞ்சென்ற ஆபிரகாம் பண்டிதர் அவர்கள் "கருணாமிர்த சாகரம்" என்ற ஓர் அரிய நூலை இயற்றித் தமிழிசைக்கு உயிருதவினார்கள். இந்நூல் சிறப்புற வெளிவர உதவியவர்கள், 'பிரின்ஸ் ஆப் வேல்ஸ்' (Prince of Wales) இளவரசரால், 'கில்லாத்து' என்ற பரிசு பெற்ற வரும், 'கரிகாற் சோழன்', 'கன்றுங் கனியுதவும்', 'இராசராசன்' முதலிய நூல்களின் ஆசிரியரும், தஞ்சை ஐயாற்று அரசர் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியராய்த் திகழ்ந்தவரும், 'தமிழ்ப் பொழில்' ஆசிரியராயிலங்கிய வருமாகிய காலஞ்சென்ற தமிழ்ப்பேராசிரியர் பண்டித L. உலகநாத பிள்ளை அவர்கள் ஆவார்கள். அவர்தம் உழைப்பினை, அறிவின் சிறப் பினைத் தமிழகம் பாராட்டா தொழிந்தது பெருங்குறையேயாம்.

**இதுபோ திசைத்தோன் டியற்றுறூஉம் அடிகள்.**

இசைத்தமிழ்க் குறியீடுகளையும், யாழியல்களையும் நன்கு ஆராய்ந் தறிந்தவரும், முத்தமிழ்ப் புலமையும், வித்தகத் திறமையும் ஒருங்கு பெற்றவரும், பன்மொழிப் புலவரும் ஆகிய மறைத்திரு. விபுலாநந்த அடிகள் அவர்கள் யாழியற் கருவிகளை நன்கு, துருவி ஆராய்ந்து அடி யார்க்கு நல்லாரின் உரையையும், ஏனைய தமிழ் நூல்களின் துணையை யும், பிறமொழி நூல்களின் துணையையுங் கொண்டு, பண்டைத் தமி ழிசை மரபுகளையும், யாழியல் முறைமைகளையும் கண்டுபிடித்து, கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டுபிடித்து உதவினாற்போல, இது

காறும் தமிழர்களால் ஆராய்ந்து கண்டு உணரப்பெறாத ஆராய்ச்சி முடிபுகளடங்கிய 'யாழ் நூல்' என்னும் ஒரு சிறந்த நூலை இயற்றி யுதவியுள்ளார்கள். தமிழன்னைசெய்த தவப்பேறாற்றோன்றிய அடிகள் இந்நூலை எம் சங்கச் சார்பில் வெளியிட்டுக்கொள்ள உதவி புரிந்த மைக்குத் தமிழ் மக்களும், தமிழிசையாளர்களும் அவர்கட்கு நன்றி செலுத்துங் கடப்பாடுடையர்.

**'இசைநாடகத்தமிழ் இயலுணர் தஞ்சை'**

இசைத் தமிழாக்கம் கருதிப் பணியாற்றினாற் போல நாடகத் தமிழின் வளர்ச்சிவேண்டியும் இத்தஞ்சைமாநகர் நற்பணியாற்றியுளது. சோழமன்னர்கள் தேவார முதலிய தெய்வப் பாடல்களை ஓதுவார்க்கு நிபந்தங்கள் விட்டிருந்தனர் எனத் தஞ்சை, முதலாம் இராசராசனின் 'திருப்பதியம்' எனத் தலைப்பெய்திய கல்வெட்டுக்கூறுகின்றது. இராசராசன் காலந்தொட்டு, இந்நாள் வரையில் பெரியகோயிலில் எவ்வாற்றாலோ நாடகம் நடிக்கப்பெற்று வருகிறது. சரபோசி மன்னன் காலத்தில் "இசைமுழக்கு அரண்மனை முற்றிலும் இனிதியம்பும்" எனக் கேட்கின்றோம். பரத நாட்டியம் எனும் பண்பார்கலை இத்தஞ்சைமாநகரிற் பிறந்து வளர்ந்ததேயாம். இக்கலை முதன்முதல் தேவரடியார்கள் இடத்தில் நிலைத்திருந்து, இதுபோழ்து அடையாறு முதலிய பேரிடங்களிலும், அக்ரகாரங்களிலுங் கூடப் பயிலப்படுகிறது என்றால், இக் கலையின் மேன்மையை யாம் எங்ஙனம் புகழவல்லேம்? இங்ஙனம் நாடகத்திற்கும் நன்னிலைக்களனாயமைந்தது தஞ்சையேயாம்.

**இசைக்கலைக் கோயில் எழுப்பிடுவோம்.**

இத் தஞ்சைமாநகரில் இசைக்கல்லூரி ஒன்றினை நாட்டி, அதனை எம் கரந்தைப் புலவர் கல்லூரியுடன் இணைத்து, ஏற்பன செய்தோமானால், இசைத் தமிழ் வளர்தற்கு வழிசெய்தவர்களாவோம். தமிழிசை வளர்ந்தால் தெலுங்கிசை கெடுமெனச் சிலர் எண்ணி நம்மேல் சீற்றங் கொள்கின்றனர். தமிழிசை வளர்ந்தால் தெலுங்கிசை எவ்வாறு கெடும்? தமிழிசை வளர்ந்தால் தெலுங்கிசை கெடுமெனின் தமிழ் நாட்டில் தெலுங்கிசை வளர்ந்தால் தமிழிசை கெடாதோ? இவற்றையெல்லாந் தாங்கள் ஆராய்ந்துணர்ந்து தமிழிசை எதிர்ப்பாளர்கட்குத் தமிழிசை மாநாட்டில் அறிவுகொளுத்தி யுள்ளீர்கள் ஆகையால் யாம் மேலும் அறிவிக்கவேண்டியது ஒன்றும் இன்றெனக் கருதுகின்றோம்.

**கொச்சியில் திவான்பதவி கொண்டொளிர்ந்த கோவே!**

அறிஞர்கள் இசைவளர்ச்சிக்குரிய வழிகள் ஆறு எனக் கூறுகின்றனர், அவையாவன: கீதம், பிரபந்தம், சூளாதி, வண்ணம், கீர்த்

தனம், பதம் என்பனவாம். இவ்வாறு வழிகளும் வளர்தற்கேற்ற அமைப்பு முறையில் தொடங்கப்பெறும் "இவ்விசைச்சங்கம்" தழைத்தோங்குதற்குத் தங்கள் தலைமை சால்புற உதவுமென் றெண்ணுகின்றோம்.

**வருக! எம்தலைவ! வாழ்வுறச் சங்கம்**

எனத்தங்களை வரவேற்று இச்சங்க வாழ்வு உயரத் தாங்கள் தலைமை தாங்க வேண்டுமெனத் தங்களை வேண்டிக்கொள்கின்றோம்.

வாழ்க தமிழிசை! வாழியர் சர். சண்முகம் எனவாழ்த்துகின்றோம்.

இன்னணம்,
**A. Y. அருளாநந்தசாமிநாடார்**
*சங்கத் தலைவர்.*

---

இனிய தமிழில் பாடி இசைக்கலையை வளர்ப்போம்

## தமிழ் இசை விழா, சென்னை

*தமிழ் இசைச் சங்கம்89, சிங்கண்ண நாய்க்கர் தெரு,*

*ஜார்ஜ் டவுன், சென்னை 14—12—'44*

### இரண்டாம் ஆண்டு

---

அன்பார்ந்த ஐயா,

தமிழ் இசைச் சங்கத்தின் சார்பில் இவ்வாண்டு தமிழிசை விழா, சென்னை அரண்மனைக்காரத் தெருவிலுள்ள 'செயின்ட் மேரீஸ்ஹா'வில், நிகழும் தாரண ஆண்டு மார்கழித்திங்கள் 9-ம் நாள் 23-12-44 சனிக்கிழமை மாலை 4-மணிக்குத் தொடங்கும்.

திருவாளர் சர். பி. டி. இராஜன் பார்-அட்-லா அவர்கள் விழாவைத் தொடங்கிவைப்பார்கள். அவ்வமயம் தாங்கள் வந்திருந்து விழாவைச் சிறப்பிக்க வேண்டுகிறோம்.

### நிகழ்ச்சிமுறை

சனிக்கிழமை (23—12—44)

| | |
|---|---|
| மாலை 4 மணி : | இசையரங்கு: திருமதிகள் டி. அமிர்தவல்லி, வி. கமலா (தமிழிசைக் கல்லூரி மாணவிகள்) |
| 5-30 ,, | தொடக்க விழாச் சொற்பொழிவு |
| 6-30 ,, | திருமதி. கௌசல்யா இராமகிருஷ்ணரெட்டி வீணையும் பாட்டும் |

இங்ஙனம்,
**திவான்பகதூர் T. M. நாராயணசாமி பிள்ளை**
*வரவேற்புக்கழகத்தலைவர்*

அண்ணுமலைப் பல்கலைக் கழகத்துப்

பட்டமளிப்பு விழாவில்

கான்பகதூர் P. கலிபுல்லாசாகேப் பகதூர் M. A; B. L.

## ஆற்றிய சொற்பொழிவின் பிழியல்

இப்பேரவையில் இன்று சொற்பொழி வாற்றுவதனல் யான் மிக்க பெருமையடைகின்றேன். ஏனெனில் இந்தியநாடு முழுதினும் இக்கலைக் கோயில்போன்று தனிமனிதனல் நிறுவப்பெற்றது பிறிதொன்றில்லை. இதை நிறுவிய என்னுடைய பேரன்பர் அண்ணுமலை அரசரது வாழ்க்கையினின்றும், கலைஇளைஞர்கள் (graduates) தாம் புகும் வாழ்வில் விலங்கும் அரில்களை அறுக்க நேரிய வழிகளையும், ஊக்கத்தையும் பெறுவார்கள். கலைஇளைஞர்கள் தங்கள் முன்னேற்றத்தையும், வருங்காலத்தே தாய்நாட்டின் உயர்வினையும் கருதிப் பணி புரியும் கடப்பாடுடையர்.

இற்றை நாளுலகம் போர்ச்சுழலில் சிக்கித் தவிக்கின்றது. ஹிட்லர் முசோலினி, டோஜோ ஆகியமூன்று குருதிவெறியினரால் ஐரோப்பா முழுதும் அல்லலுறுகின்றது. ஆண்டவனருள் உருசியரைக் கொண்டு நிலைமையை மாற்றியுள்ளது. எனினும் பனிப்பு முற்றும் நீங்கவில்லை. 1942ம் யாண்டிலிருந்த ஜப்பானியத்தொல்லை தற்போது இந்தியருக்குக் குறைந்துள்ளது. பலதுறையிலும் இந்திய நாட்டினும் பெரிதான சினநாடு கடந்த ஏழு யாண்டுகளாக அலைப்புறுங்கால் நாம் அமைதியாய் இருத்தல் ஆங்கிலேயரின் உறவினுற்ருன் என்ற உண்மையை ஒப்புக்கொள்ளல் வேண்டும். உண்மையிலேயே நாம் நாட்டுப்பற் றுடையவராயின் நம் திறமையைக் காட்டித் தக்கநிலையடைந்து நமது விடுதலையைப் பெறவேண்டுமே யன்றிப் பிச்சை கேட்கக் கூடாது. பிரித்தன், உருசியா, அமெரிக்கா, ஆகியமூன்று விடுதலை நாடுகளும் மற்றும் பலவும் தங்நல மற்ற தொண்டு மிகுதியும் புரிந்து வெற்றிசால் விளைவினை நெருங்குகின்ற இந்நிலையில் வெற்றியின் பயனில் பங்குபெற நமக்கு என்னஉரிமை யுண்டென்பதை ஆராயவேண்டாமா?

மாகாணம், சமூகம், குலம், மொழி, ஆதியவற்றினை முன்னிட்டுப் பிணக்கிடவும், அன்றி ஆங்கிலேயனே வெளியேபோ என்று கூச்சல் போடுதற்கும் இது ஏற்றபொழுதாமா? அரசியல் வாதிகளின் மயக்கும் சொற்களைக் கொண்டு ஏமாருது உண்மை நிலையினை உன்னி உயர்வடைய வழிகோலுங்கள். மூன்ருவது மனிதனைக் காரணங்காட்டி நாம் தாழ்வடைதல் தகாது. “தீதும் நன்றும் பிறர்தர வாரா”

உலக வரலாற்றிலே சிறப்பாக இந்திய வரலாற்றிலே இதற்கு முன்நிகழாத ஒருதக்க வாய்ப்பு அறிவாற்றல் ஆண்மையுடையாருக்கு இப்பொழுது கிடைத்துள்ளது. நமது நல்லூழினல் வாய்த்த மக்களின் மாண்புறு நண்பன் என்றும் அன்னர் உளங்கவரும் சொற்பொழிவாளன் என்றும் தன்னுடைய குறுகிய ஆட்சிக் காலத்துள்

பெயர் பெற்று நமது மாகாணத்தின் சிறப்பிற்குச் செயற்கரிய செய்யும் சீரியகவர்னர்ஆகிய சர். ஆர்தர் ஹோப் அவர்கள் அடிக்கடி அறிவுறுத்துவது போன்று போர்முயற்சியில் ஈடுபட உங்களைக் கேட்டுக்கொள்கின்றேன். அசோகர், அக்பர், சிவாஜி ஆகியவீரர்களே இந்தியநாட்டின் வரலாற்றினை யாக்கும் அடிப்படையாவர். பரத்துவாசர் விசுவாமித்திர் ஆதிய ரிஷிகளல்லர். இதை நினைவிற் கொள்க. மற்றைய நாடுகளுக்கு ஒத்த நிலையில் இந்தியநாட்டின் நாவாய், நடை, வளி, படைகள் உயர்த்தப் பெற்றாலன்றி இந்திய நாட்டின் விடுதலையும், பெருமையும் முயற்கொம்பேயாம். படையில் உழைத்தலும் கல்வியேயாகும். பன்னாடு சுற்றி உலகமக்கட் டொகுதியுடன் உறவாடற்கு வாய்ப்புங்கிட்டும். வெற்றிகண்டு மீளுங்கால் அறிவும், வீறும் பெற்றவராவீர்!

இந்தியநாட்டின் நாவாய்ப்படை இன்னும் சிறு குழவியாக இருக்கின்றது. நமக்குவேண்டிய அளவு வளர்ச்சியுறவில்லை. நாவாய்ப்படை போர்க் காலத்தன்றி அமைதிக்காலத்திலும் வணிகம், கைத்தொழில், பயிர்த்தொழில் ஆதியவற்றின் முன்னேற்றத்துக்குப் பேருதவியாகும். நமது முன்னோராகிய பாண்டியரும் சோழரும் கிழக்கின் வெகு தொலைவில் தம்முடைய படைகளைக்கொண்டு வென்று ரோம் கிரீஸ் ஆகிய மேலை நாடுகளோடு வாணிபம் நடத்தினார்களென்று வரலாறு கூறுகிறது. அத்தகைய பெருமைவாய்ந்த நாட்கள் மீண்டும் வரவேண்டும். நாவாய்த்தொழிலுக்கு ஏற்ற மக்களல்லர் என்று நம்மைக் குறைகூற முடியாது. இக்காலத்தும் மரக்கலங்களில் வேலைசெய்யும் இந்தியரைப் போற்றாத நாடே இல்லை. ஆனால் அவர்களெல்லாம். தாழ்ந்த வேலையிற்றா னிருக்கின்றார்கள். படிப்பில்லா அன்னாரைப் போலல்லாது உங்களைப்போன்ற கலை இளைஞர்கள் ஈடுபட்டால் தலையாய நிலையையடைந்து இந்தியத்தாய்க்கும் பெருமை யளிக்கலாம்.

போரிற் கலந்து தொண்டாற்றும் மறவுள்ளம் படையாத சில இளைஞர்க்குப் பிறிதொரு துறை முன்னிற்கின்றது. இந்திய நாட்டிலும் பிரித்தனிலும் உள்ள தொழிற் சாலைகளிற் சேர்ந்து கலை, வணிகம், கம்மியம் முதலியவற்றைச் சிறப்பிக்கும்படி அறிவுறுத்துகின்றேன். அரசியல் வாதிகள் பலவாறு தம் கொள்கைகளை எவ்வளவு பரப்பினும் பயனில்லை. மற்றைய நாடுகளினும் சிறக்க செல்வம், தொழில், வணிகம் ஆகியவற்றில் என்று இந்தியா வெற்றிகாண்கின்றதோ, அதுவரை விடுதலை கிடையாது என்பது என்னுடைய கூற்று. முன்பு ஒருமுறை ஓர்இந்திய அரசியலறிஞர் "கைத்தொழிலை வளர்க்க; இன்றேல் அழிக" என்று கூறியது என் நினைவுக்கு வருகின்றது. இந்நாட்டிலுள்ள எல்லா அரசியல் வாதிகளினும் டாட்டாக்களும், பிர்லாக்களும், டால்மியாக்களும், G. D. நாயுடுகளுமே இந்நாட்டிற்குச் சிறப்பினை யாக்கியுள்ளனர். அவர்களுடைய அடிச்சுவட்டைப் பின்பற்றி நாட்டை வளம் படுத்துக. அன்னாரைப்போன்று சிறக்க இயலாது என்று பின்னடையற்க. முப்பது யாண்டுகட்கு முன்பு G. D. நாயுடுகாரு தனது இன்றைய நிலையைப்பற்றிக் கனவு கண்டிருக்கமுடியாது. பேசியிருப்பரேல் பித்தர் பட்டம் பெற்றிருப்பர். வியக்கத்தக்க இம்மாறுதலுக்குக் காரணம் அவர்தனக்கு ஏற்றதொழிலைத் தேர்ந்தெடுத்து அதில் ஈடுபட்டுச் சலியாது இடையீடின்றி உழைத்ததேயாம். இவற்றினும்

மேலாகத் தன்னம்பிக்கையை மேற்கொண்டனர். இவற்றை நீங்களும் உளத்துட் கொள்ளவேண்டும். இதை விடுத்து அரசியல் வாதிகளைப் பின்பற்றி அல்லற்பட்டுப் பின்னர் அவர்களைக் குறைகூறுதீர்கள்.

இறுதியாக உழவு தொழிலும் உங்கள் கருத்திற் பதியவேண்டும். நாடுமுழுதும் உணவில்லாக்குறை. நிலம் வளம் படைத்த பயிர்த் தொழில் நாடு என்ற சிறப்பும் பெற்றிருந்தும் நம்மக்கள் பழையமுறை களையே இன்னும் கையாண்டு வருவதால் விளைவு பெருகாது நாளுக்கு நாள் குன்றிவருகிறது. மக்களெண்ணிக்கை மிகுங்கால் விளைவுமுறை களையும் மாற்றவேண்டும். இந்நாட்டில் எல்லாவகையான உணவுப் பொருளையும் உண்டாக்கலாம். உழவு இழிந்த தொழிலல்ல. நமது உலகப்புலவர் திருவள்ளுவர் ஒப்பற்ற தலைமையான சீரியதொழில் உழவு தான் என்றறைகின்றார்.

நீங்கள் எத்துறையி லிறங்கினாலும் முன்னேற்ற மடையப் பாடு படுங்கள். ஒரு மனிதனுடைய நாள்வரவு அமெரிக்காவில் ரூபாய்15ம், பிரித்தனில் ரூபாய்5ம் ஆகநமது நாட்டில் மட்டும் ஒன்றரை அணுதான் ஏன்? இப்பல்கலைக்கழகப் படிப்பு, இத்தாழ்வினை நீக்கி நீங்களும் மற்றையரும் மாண்புற ஏற்றவழி வகுப்பதற்கு அடிப்படை யறிவைக் கொடுத்துள்ளது. வெறும் எழுத்தாளர் (Clerk) வேலையினை மட்டும் அவாவி, ஈடுபட்டு, அறிவுவளம் பெற்றோங்காது, மங்கும்படிச்செய்யா தீர்கள். உயர்ந்த குறிக்கோளைக் கொள்க. தக்கவேலையைத் தேர்க. அதனைவிடாது பற்றி முன்னேறி வெற்றி பெறுக. வருங்கால உலகத்தில் இந்தியநாடு தனக்குரிய நன்னிலையையடையும். “ஒருநாடு எத்துணைப் படைவலியும், மற்றைய செல்வ உயர்வையும் பெற்றிருப் பினும் துணை வலி யின்றேல் தாழ்வுறும்”. என்று தரவா வாய்மைத் தமிழ்மறை யாத்த திருவள்ளுவர் கூறியுள்ளார். ஈராயிரம் யாண்டு கட்கு முன்பே நாடு தனித்திருத்தல் நன்றல்ல என்பதை உணர்ந் திருந்தனர் என அறிகின்றோம். அழிக்கும் படைகள் மிகுதியாக உலவும் இன்றைய நிலையில் கூட்டுறவு மிகவும் இன்றியமையாதது. ஹாலண்ட் பெல்ஜியம், ஃப்ரான்ஸ் ஆகிய நாடுகளில் இப்போர்க்காலத்து நிகழ்ந்த செய்திகள் நமது தமிழ் நாட்டு ஞானியின் அறிவுச்சுடர் வீசும் பொன் னெழுத்துக்குப் பொன்றாத சான்றாக மிளிர்கின்றன. குறுகிய தனி நாட்டுக் கொள்கை எவ்வளவு அழிஇயல்புடையது என்பதை அறிந்து கொண்டீர்கள். உலகச்சமுதாயத்திலே நீதிக்குப் புறம்பாகாது எல் லோருக்கும் ஒத்தநிலையில் அரசியலமைத்துக் கொண்டு எல்லாநாடு களும் ஒருகுடும்பமாக வாழ்தலே சிறப்புடையதென இன்றையபோர் நமக்கு அறிவுறுத்துகின்றது.

இவ்வுண்மையை விடுதலை வெறியிலே மறந்து நிலைத்த கூட்டாளி யைப் பிரியஎண்ணக்கூடாது. ஆனால் பிரித்தனோடு நட்பு முறையில் நமக்கு நலங்கொடுக்கும் ஓர் அரசியல் அமைப்பை ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். குடியேற்ற நாட்டு நிலை தவறானதன்று என்பது என்னுடைய தாழ்மையான கருத்து. பலகருத்துடையாரையும் பிணைத்து ஒன்றுபடுத்தி நடத்தும் நல்ல அரசியலென்று ஆங்கில அரசியலை வாழ்த்த எவரும் பின்வாங்கார். பிரித்தனொடு உறவுகொண்டிருப்பதே

தம்நாட்டிற்கு வருந்தீங்குகளினின்றும் உய்வதற்குரிய வழியென்று அமெரிக்கா ஐக்கிய நாடுகள் எண்ணி அதற்கு ஆவன செய்யும் இக் காலத்தே "ஆங்கிலேயனே வெளியேபோ" என்றுசொல்வது பைத்தி யக்காரத் தனமாகும். இருநாடுகட்கும் நலம்பயக்கும் ஒருநடுநிலையான ஏற்பாட்டைச் செய்துகொள்வது இந்தியநாட்டின் விடுதலைக்கேற்ற வழியாம். ஒன்றுபட்டாலுண்டு வாழ்வு இன்றேல் அனைவருக்கும் அல்லல் என்பதை மறவற்க. நிறம், சாதி, குலம், நாடு முதலியவற்றால் உயர்வுகேட்கும் காலம் மறைந்துவிட்டது. குறுகிய மனப்பான்மைக்கு உலகில்இனிஇடமில்லை. எல்லாருக்கும் ஒத்தநிலை என்பதே நமதுமந்திர மாகஇருத்தல் வேண்டும். சாதி, சமய, ஆண், பெண் வேறுபாடின்றி ஒன்றவேண்டும். தாய், தங்கை, மனைவிமுதலிய நிலையிலுள்ள எல்லாப் பெண்களையும் அடிமை நிலையினின்றும் மாற்றிஒத்த தகவுடையராய் ஆக்கவேண்டும்.

கலை இளைஞர்களே! நான்ஒருவணிகன், அறமன்றவாதி, Advocate சட்ட மாக்குபவன், நாடாள்பவன் ஆகியநிலையில் நின்று உலகப் பயிற்சியுற்று, கண்ட பொருள்மொழிகளைக் கூறி இந்தியநாட்டின் உண்மைநிலையைப் படம்பிடித்துக் காட்டியுள்ளேன். நுங்கட்குத்தக்க துறையைத்தேர்ந்து அதிற்சலியாதுழைத்து வெற்றிகண்டு உலகச் சமுதாய பொதுநிலையத்திலே வருங்காலத்து இந்தியாவின் தகுதியினை உயர்த்துவது நுங்கள்கடமையாகும்.

## திரு. ஆறுமுக நாவலர் நினைவுநாள்

## 6—12—'44

நாவலர்இதழ் "ஈழகேசரி"

கார்த்திகைமா தத்துமகங் காசினிக்குச் சைவநிலை
சேர்த்திப் பரசமயஞ் சேதித்துச் சீர்த்திமிக
மேவுதமிழ் தந்தகந்த வேணல்லூ ராறுமுக
நாவலர்வீ டுற்றதிரு நாள்

'யாழ்ப்பாணத்து' நல்லூர் ஆறுமுக நாவலரவர்கள் ஒரு அவதார புருடர். இடையிருட்கடைக் காலத்தில் விடியுமுன் விசும்பில் விளங்கும் வெள்ளிபோலத் தமிழகத்தில் தளரும் சைவமும் தமிழும் தழைய, அவ்விரண்டிற்கும் புத்துயிர் வழங்கப் பிறந்த வள்ளலார். முன்னே பல பாகங்களிலும் தமிழகத்திலிருந்து தான் பெற்ற சில சிறு நன்மைகளை வட்டியுடன் பெருக்கி ஒரு காலத்து ஒரு முகமாகப் பழங் கடனைத் தீர்த்து, என்றுந் தீர்க்கொணுவாறு தமிழகத்தை ஈழநாட் டுக்குக் கடமைப் படுத்திய பேருபகாரி நாவலரென்றால் அது மிகை யாகாது.

பேராசிரியர்,
S, சோமசுந்தர பாரதியார் M. A. B. L.
அவர்கள்.